அவர்கள், அரசு ஊழியர்களுக்கு கிள்ளிக் கொடுப்பவர் இல்லை, அள்ளி அள்ளிக் கொடுக்கும் அன்பு மனம் கொண்ட வள்ளல் தன்மை கொண்டவர். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள். (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) இல்லை. இப்படி திடீரென்று இப்படியெல்லாம் வந்து. . . (குறுக்கீடுகள்) அதைப் பார்க்கலாம், இருங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. அதையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். நான் அனுமதி அளிக்கிறேன், உட்காருங்கள். இப்போது யார் பேசுகின்றீர்கள்? திரு. க. பாலகிருஷ்ணன், (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், அம்பளச்சேரி கிராமத்திலிருந்து திருப்பதிக்கு தெய்வத்தை வழிபடச் சென்ற பக்தர்களை ஆந்திர போலீசார் கைது செய்து, செம்மரக் கடத்தல் என்று சொல்லி, வழக்குப் போட்டு, அவர்களை சித்திரவதை செய்து சிறையிலே அடைத்திருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து ஆந்திர போலீசார் தமிழகத்திலிருந்து வருகிற பக்தர்கள் உள்ளிட்ட அனைவரையும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும், record செய்துவிட்டேன், அதை விடுங்கள். (குறுக்கீடுகள்) Record செய்துவிட்டேன், அதை விடுங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் திருப்பதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தானே சொல்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, அதைத்தானே சொல்கின்றீர்கள்? அவ்வளவுதான்; உட்காருங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு முக்கியமான விஷயம் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வருடத்தில் தமிழகம் எங்கும் நடந்த சாதிய வன்கொடுமைகளினால் இறந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், நீங்கள் சொல்லுங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பகுதியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, record செய்தாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், சொல்லுங்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நள்ளிரவு 2 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம், வெங்கத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர், மகளிர் என்றும் பாராமல் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அவ்வளவுதான். நான் அதை record செய்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)